சிவராத்திரியும் தவசிப்பாறையும்

நினைவு தெரிந்து பல ஆண்டுகளாக சதுரகிரி, சுந்தரமகாலிங்கம் கோவிலுக்குச் செல்லும் வழக்கம் இருக்கின்றது. அண்ணன் அருணகிரிராஜா அவர்கள் மாதாமாதம் அமாவசைக்குச் செல்கின்றார். நானும் இடையிடையே நேரம் கிடைக்கும் போதெல்லாம் செல்வதுண்டு.

மாசிமாதம் மட்டும் அமாவசைக்குச் செல்லாமல், சிவராத்திரிக்குச் செல்லும் வழக்கம் கடந்த மூன்றாண்டுகளாய் எங்களிடம் இருக்கின்றது. மலைகள் சூழ்ந்த சதுரகிரியில் சிவராத்திரியன்று மட்டும், மூலஸ்தானத்திற்குள் அனைவரும் சென்று சுந்தரமகாலிங்கத்துக்கு நேரடியாய் மலர்களால் அர்ச்சிக்கலாம். எனவே தொடர்ச்சியாய் மூன்றாண்டுகளாய் அங்கே சென்று கொண்டிருக்கின்றோம்.

இந்த ஆண்டும் அது போல், சிவராத்திரியன்று சதுரகிரி சென்றிருந்தோம். என்னே இறைவன் கருணை? இந்த ஆண்டு, வெகுநாட்களாய் எங்கோ தூரத்தில் காட்சியளித்த தவசிப்பாறைக்குச் செல்லும் வாய்ப்பு, அதுவும் சிவராத்திரியன்று சதுரகிரி மலையைச் சுற்றி வரும் பேறு கிடைத்தது இறைவன் சித்தம், எங்கள் பாக்கியம் என்று நினைக்கின்றேன்.

இனி, 06-03-2008, சிவராத்திரியன்று, சதுரகிரி தவசிப்பாறைக்குச் சென்ற மயிர்க்கூச்செறியும் அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோவிலுக்கு அருகில் இருக்கும் சிவகாசி மடத்திற்கு 10 மணியளவில் வந்து சேர்ந்தோம். வந்ததும் கால் கைகழுவி ஆசுவாசப்படுத்திக் கொண்டு அருஞ்சுவையுடன் தயாரிக்கப்பட்டிருந்த காலை உணவை முடித்தோம்.

எங்களுடன் வந்தவர்களில் ஒருவரும், அண்ணியாரின் தம்பியுமான திரு ராஜா முடியிறக்குவதற்காக வந்திருந்தமையால், முதலில் அதை முடித்து விடலாம் என்று கோவிலுக்குக் கிளம்பினோம். கோவிலின் அருகே முடியிறக்கிக் கொண்டிருந்தார்கள். அது வரை, நாங்கள் யாருமே தவசிப்பாறை செல்வது குறித்தோ, பெரிய மஹாலிங்கத்தைத் தரிசிப்பது குறித்தோ நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. காரணம் ஒவ்வொரு முறையும் சுந்தரமகாலிங்கம் கோவிலில் முக்கனிகளுடன் கூடிய பழக்கலவை சாத்தும் புண்ணியம் பெற்றிருந்தோம். அதற்கான வேலையைத் துவங்கினால் தான், சிவராத்திரி பூஜைக்கு முன்னர்

அனைத்தையும் தயார் செய்ய இயலும்.

எங்களுக்குள் பேச்சு நடந்து கொண்டிருந்தது. ஒவ்வொருவரும், இது தான் பெரிய மஹாலிங்கத்துக்குப் போகும் பாதை இதுவாக இருக்கும், அதுவாக இருக்கும் என்று பேசிக்கொண்டிருந்தோம்! அங்கே முடியிறக்கிக் கொண்டிருந்தவர், எங்கள் அடாவடி பொறுக்க முடியாமல், பெரிய மஹாலிங்கத்துக்கு இரண்டு பாதை இருக்கு, ஒன்று தவசிப்பாறை வழியாக, இன்னொன்று தவசிப்பாறை செல்லாமல் தனியாக என்றார்.

அப்படித் தான் பேச்சு மெல்ல வளர்ந்தது. எவ்வளவு நேரமாகும் என்று விசாரிக்க ஆரம்பித்தோம். சரியாக மூன்று மணி நேரமாகும் என்றார் அவர். "அடடா! இன்னும் கொஞ்சம் முன்னமே வந்திருந்தால் அதை ஏறிப்பார்த்திருக்கலாமே!" என்று பேசிக் கொண்டே, "அடுத்த முறை வரும் போது கட்டாயம் ஏறி விட வேண்டியது தான்" என்று முடிவு செய்தோம்!

அப்போது அதை ஏன் நாம் இன்றே தரிசிக்கக் கூடாது? என்ற கேள்வி வந்தது. முக்கனி வேலையும் ஞாபகம் வந்தது. சரி, நாம் இருந்து என்ன சாதிக்கப் போகின்றோம், அது தான் அண்ணன் இருக்கின்றாரே, அவர் பார்த்துக் கொள்ளட்டும் என்று முடிவுக்கு வந்து, நானும், அலுவலக நண்பர் ஒருவரும் கிளம்பினோம்.

எங்கள் ஆர்வத்தைப் பார்த்ததும், அந்த ஊழியரே சொன்னார், "சார், அது இங்கே பாதை தெரிந்த யாரையாவது கூட்டிச் சென்றால் தான் போக முடியும் அவர்கள் அங்கே மூலிகைக் கடையில் இருப்பார்கள். அங்கிருந்தால் அழைத்துச் செல்லுங்கள்" என்றார். சரியென்று அலுவலக நண்பர் போய் விசாரித்து வருவதற்குள் அங்கே வந்து சேர்ந்த அண்ணியும், தானும் உடன் வருவதாக ஆர்வம் தெரிவிப்பதற்கும், எங்களை அழைத்துச் செல்ல வழிகாட்டி தயாராய் இருப்பதாக அலுவலக நண்பர் வந்து கூப்பிடுவதற்கும் சரியாக இருந்தது.

அப்போது மணி 11.30. உச்சி வெயில் ஆரம்பித்திருந்தது. யாருக்கும் செருப்பு கிடையாது. மலையுச்சியில் தவசிப்பாறை. உயிரை மறந்த உடல்களில் நான் சொன்ன கறுப்பு போல் முன்னால் எங்கள் வழிகாட்டி. பாதையில்லாப் பாதையில் மணி 3க்குள் திரும்பி விட வேண்டும் என்ற வைராக்கியத்தில்,

ஈசன் மேல் பாரத்தைப் போட்டுக் கிளம்பினோம்!

இதோ எங்களின் வழிகாட்டி முன்னே நடக்க ஒற்றையடிப்பாதையில் ஆரம்பித்து போகப் போக பாதையே இல்லாமல் செல்லும் தவசிப்பாறை யாத்திரை துவங்குகின்றது!

பசுமை எழில் கொஞ்சும் வன வளம் எங்களைக் கொள்ளையடிக்கப் போவது தெரியாமல் ஏதோ முரட்டுத் தைரியத்தோடு கிளம்பி விட்டோம்! கொஞ்சம் கொஞ்சமாய் காடு எங்களை விழுங்க ஆரம்பித்தது. முதலில் இந்தப் பாதையை வழிகாட்ட நமக்கு எதற்கு ஆள் என்ற நினைப்பெல்லாம் போய், வழிகாட்டியைத் தவற விட்டு விட்டால் நாங்கள் அம்பேல் என்ற உண்மையை உணர்ந்ததும், குட்டி போட்ட ஆடாய் எங்கள் வழிகாட்டியைக் கண்பார்வையிலிருந்து தப்ப விடாமல் விரைந்து சென்றோம்.

ஜெயப்பிரகாஷ். இது தான் எங்களை அழைத்துச் சென்ற வழிகாட்டியின் பெயர். அவரது வேகத்துக்கு அந்த வனத்தில் யாரும் ஈடு கொடுக்க முடியாது என்று நினைக்கின்றேன். அந்த மலையெங்கும் இருக்கும் சிகைக்காய்களைப் பறிக்கும் குத்தகை ஒப்பந்தம் எடுத்தவர் என்று அறிந்து கொண்டோம். பலவகை மூலிகை பற்றி அறிந்திருந்தார். இருந்தும், சட்டப் பிரச்னைகள் காரணமாக, எந்த மூலிகை பற்றியும் கேட்காதீர்கள்.

தேவைப்பட்டால் சதுரகிரி கோவில் அருகே இருக்கும் மூலிகைக் கடையில் கேட்டுக் கொள்ளுங்கள் என்று நாசூக்காய் சொன்னாலும், வழியில் எங்களின் அணுகுமுறையைக் கண்டு பல மூலிகைகளை அடையாளம் காட்டினார். இதை ஏன் எல்லோருக்கும் சொல்லவில்லை என்ற போது, "நாங்கள் ஒரு மூலிகையைக் காட்டி, சாப்பிடும் முன் ஒரு 5 கிராம் எடுத்துக் கொள்ளச் சொன்னால், சாப்பிட்ட பிறகு 10 கிராமாக எடுத்துக் கொண்டால் அதன் வீரியமே வேறு விதமாக இருக்கும். எதற்கு வம்பு?" என்று சொன்னார். உண்மை தான் என்று நினைத்துக் கொண்டேன்.

மேலே தெரிகின்றதே மலை. அதன் அடிவாரத்தில் தான் சந்தன மஹாலிங்கம் கோவிலும், நாங்கள் தங்கியிருக்கும் மடமும் இருக்கின்றன. மரங்களின் உயரம் காரணமாக நம் கண்களுக்குத் தெரியவில்லை. உயரச் செல்லச் செல்ல தெரியவருமா என்று காண்போம்!

வழியெங்கும் சுயம்புவாய், என்ன மரமென்றே கண்டறிய முடியாமல், வேர்கள் மேலும் கீழுமாய்ப் பரவி, உச்சி வெயிலென்றே அறிந்து கொள்ளா வண்ணம் நிழல் தந்த தருக்கள்.

அடர்ந்த காட்டுக்குள் பிரவேசிக்கின்றோம். வழியெங்கும் கண்ணுக்கு விருந்தளிக்கும் பலவித வண்ண மலர்கள். நாசியைத் துளைக்கும் நறுமணக் கலவை. உடலெங்கும் மயிர்க்கூச்செறியும் தண்மை. எங்கெங்கு காணினும் பலவித பச்சை நிறங்கள் மனதைக் கவர்ந்தது.

சிகைக்காய் வழியெங்கும் பழுத்து உதிர்ந்து கிடந்தது. தலைக்கு மேல் பார்த்தால் மரம் முழுவதும் சிகைக்காய் காய்த்துத் தொங்குகின்றது! ஜெயப்பிரகாஷுக்கு சரியான வேட்டை தான் என்று நினைத்துக் கொண்டோம். சாம்பிராணியும் அதிகம் விளைகின்றது. மூலிகைகளின் மூலாதாரம் மேற்குத் தொடர்ச்சி மலைகள் தான். அதிலும் சதுரகிரி மலைப்பகுதியில் இல்லாத மூலிகைகளே இல்லை எனலாம்.

அண்ணாந்து பார்த்தால் நாங்கள் சென்று சேரவேண்டிய தவசிப்பாறையின் தரிசனம் கிடைத்தது. கூடவே அத்தனை உயரத்தை எப்படி அடைவது என்ற

அயர்ச்சியும் ஏற்பட்டது. திடீரென மரங்கள் அடர்ந்த பகுதி முடிவுற்று வெறும் புற்கள் அடங்கிய பகுதி ஆரம்பித்தது. ஆஹா, இனி நிழல் கிடையாதா? உச்சி வெயில் நம்மை வாட்டி எடுக்குமோ என்று பயப்பட ஆரம்பித்தோம்.

சரி நாம் ஏறும் மலை தான் அப்படியோ என்று எதிரே பார்த்தால் அந்த மலையும் அப்படித் தான் இருந்தது. ஒரு உயரத்துக்கு மேல் அடர்ந்த மரங்கள் இல்லாமல் புல்வெளி மட்டுமே கண்ணுக்குத் தெரிந்தது.

இறைவனின் அருளை இன்னேரத்தில் சொல்லியே ஆகவேண்டும். ஏதோ ஒரு உத்வேகத்திலும், ஆர்வத்திலும் அவசரமாய்க் கிளம்பி விட்டோம். அந்த உச்சி வெயிலில் தண்ணீர் பாட்டில் கூட எடுத்துச் செல்லவில்லையே என்று உயரே ஏறிக் கொண்டு தண்ணீர் தவிக்கும் போது தான் உறைத்தது. இங்கே எங்காவது தண்ணீர் கிடைக்குமா என்று வழிகாட்டியைக் கெஞ்ச ஆரம்பித்தோம். அடுத்த திருப்பத்தில் சுனை இருக்கின்றது என்றார். ஆஹா! என்னே இயற்கையின் கொடை! வற்றாத நீரூற்றாய், தெளிந்த சுனையொன்று தாகம் தணித்தது! இந்த மலையில் கேட்டதும் கிடைக்கின்றதே என்று மிக்க மகிழ்ந்தோம்.!

தாகம் தீர்த்த இனிய தெளிந்த நீரூற்று.

பாதையை ஆக்ரமிக்க ஆரம்பித்த கோரைப் புற்கள். கரகுப் புல் என்று பெயர் சொன்னார் ஜெயப்பிரகாஷ். இந்தப் புற்கள் வர ஆரம்பித்ததும் பாதை மறைந்து விட்டிருந்தது. இந்த புற்களில் ஒரு விசேஷம் அதன் இலைகளில் ரம்பம் போல் இருக்கின்றது. நாம் நடக்கும் போதே சிராய்க்கின்றது! கீழே வந்து சேர்ந்ததும் தான் கண்டோம் இந்தப் புற்களின் கைங்கரியத்தை! கால்களெங்கும் வரிவரியாய் கோடுகள் இழுத்திருநதது.

ஆளுயரத்திற்கு வளர்ந்திருந்த புற்களின் ஊடே நடக்கின்றோம். வேக வேகமாய் ஒரு மேகம் வந்து போர்த்த நிழல் வந்து மலையை மூடியது! இதோ, ஒரு மேகம் மூட, வலது புறம் சந்தன மகாலிங்கம் கோவிலும், வலது புறம் கீழே சுந்தரமஹாலிங்கம் கோவிலும், இடது புறம் ஊதா நிறத்தில் நாங்கள் தங்கியிருந்த மடமும் தெரிகின்றது. சதுர கிரி என்று பெயர் வந்ததற்கு, சுற்றிலும் நான்கு மலைகள் சதுரமாய்க் கோட்டை அமைத்திருக்க, நடுவே இறைவன் ஆட்சி செய்வதால் தான் என்று அறிந்து,

அவற்றில் ஒரு மலையில் தான் நாம் ஏறிக் கொண்டு இருக்கின்றோம் என்று எண்ணும் போதே புளகாங்கிதம் அடைந்தது.

தவசிப்பாறையைக் கொஞ்சம் கொஞ்சமாய் நெருங்குகின்றோம். இதோ ஒரு வழியாய் அடிவாரத்தில் காணும் போது மிகச் சிறியதாகவும், அருகில் காணும் போது பிரம்மாண்டமாகவும் காட்சியளிக்கும் தவசிப்பாறையை அடைந்தே விட்டோம்.

தட்டுத்தடுமாறித் தவசிப்பாறையைச் சென்றடைந்தோம். மலைச்சிகரத்தை அடைந்ததும் எல்லையில்லா மகிழ்ச்சி எங்களை ஆட்கொண்டது. எதையோ சாதித்த நிம்மதியை மனம் அடைந்தது. அமைதி குடி கொண்டது. எத்தனை முறை வர வேண்டும் என்று ஆவலுடன் இருந்தாலும், ஒரு சிவராத்திரியன்று அழைத்துக் கொண்ட பேரருளை உள்ளம் உள்ளன்போடு நன்றி கூறியது.

அப்போது ஏற்பட்ட புளகாங்கித உணர்வை என்னால் வார்த்தையில் வடிக்க இயலவில்லை. மன்னித்துக் கொள்ளுங்கள்.

மேகங்கள் எங்களைத் தழுவிச் சென்றன. வெயில் கொடுமை கொஞ்சமும் எங்களைச் சீண்டவில்லை.

தவசிப்பாறை. உண்மையில் தவசிகள் தவம் பண்ணத் தேர்ந்தெடுத்த பாறைக்குகை தான். வெளியே மிகச் சிறிய பாதையாய்த் தெரிந்தாலும், உள்ளே இரண்டு மூன்று வளைவுகளுடன் செல்கின்றது. உள்ளே செல்ல வேண்டுமானால் கைவிளக்கை எடுத்துச் செல்ல வேண்டும்

தவசிப்பாறையின் நுழைவு வாயில் படத்தில் காண்பது போன்ற சிறிய துவாரமாகத் தான் இருக்கின்றது. உள்ளே அரவம் போல் படுத்து ஊர்ந்தே செல்ல வேண்டும். சிறிது தூரம் (30 அடி போல்) தவழ்ந்து சென்றதும், பாதை வலப்புறமாய்த் திரும்பும். அங்கும் சிறிது தூரம் ஊர்ந்து சென்றால், பின்னர் தலையை மட்டும் தூக்கி ஆசுவாசப்படுத்திக் கொள்ளலாம். பின்னர், மீண்டும் அப்படியே தவழ்ந்து சென்றால் ஒரு 40 எட்டில் அமர்ந்து கொள்ளுமாறு இடம் கிடைக்கும். பின்னர் உட்கார்ந்த படியே நகர்ந்து சென்றால், 10 முதல் 15 பேர் வரை அமர்ந்து தியானம் செய்யக் கூடிய தியான மண்டபம் இருக்கின்றது. நடுநாயகமாய், தவசிகள் - சித்தர்கள் பூஜித்த லிங்கம் இருக்கின்றது. அங்கிருக்கும் அகல் விளக்கில் நாம் விளக்கேற்றிக் கொள்ளலாம். அவ்வளவு தூரம் சென்ற பிறகு மேலிருந்து வெளிச்சமும் காற்றும் மெல்லியதாய் வருகின்றது. எவ்வளவு நேரம் இருக்க வேண்டுமோ இருந்து விட்டு, மீண்டும் பழைய பாதை வழியே நகர்ந்தும், தவழ்ந்தும், ஊர்ந்தும் வெளியேறலாம். இத்தனையும் நாங்கள் செய்தோம் என்றால் இப்போது கூட உடலெங்கும் உச்சி முதல் உள்ளங்கால் வரை மின்சாரம் பாய்ந்து செல்வதென்னவோ உண்மை.

இது தான் தவசிப்பாறை நுழைவு வாயில்!

புகைப்படக் கருவியின் பிளாஷ் வெளிச்சத்தில் சிறிது தூரம் சென்ற பின்னர் எடுத்த படம் இது. பாதை எத்தனை குறுகியதாய் இருக்கின்றது என்று பாருங்கள். இதில் தான் ஊர்ந்து செல்ல வேண்டும். தலையைக் கூடத் தூக்கிப் பார்க்க இயலாது.

இயற்கையாய் அமைந்த இந்தக் குகையைச் சித்தர்கள் தவிர வேறு யாரும் கண்டிருக்க இயலாது தான்!

தவசிப்பாறைக்கு வெகு அருகிலேயே இன்னுமொரு குகையும் இருக்கின்றது. அதன் முகப்பில் விநாயகர் சிலையும், மூஞ்சூறு வாகனமும் காட்சியளிக்கின்றன. தரிசனம் செய்தோம்.

தவசிப்பாறையில் ஒரு பெரியவரைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது நாங்கள் செய்த பாக்கியம்! அவர் ஒரு விநாடியில் நிகழ்த்திய

விநோதத்தைக் கண்கொண்டு பார்த்து புல்லரித்தோம். அதைப் பின்னர் சொல்கின்றேன்.

இவரிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தோம். இவர் கன்னியாகுமரியைச் சேர்ந்தவராம். மலைத்தலங்களைத் தரிசிப்பதைத் தன் வாழ்நாள் லட்சியமாய்க் கொண்டவராம். சதுரகிரிக்கு முதல் முறையாக வந்திருக்கின்றாராம். வந்ததுமே தவசிப்பாறையைத் தரிசிக்கின்றார். (நாங்களெல்லாம் பலமுறை கண்டும் வராதிருந்ததை எண்ணி எனக்குள் கழிவிரக்கம் ஏற்பட்டது) திருவண்ணாமலை தீபமேற்றும் சிகரம் சென்றிருப்பதுடன், அங்கிருக்கும் கந்தாச்ரமம், விருபாக்ஷி குகை என்று அவரது அனுபவங்கள் ஒவ்வொன்றாய்க் கேட்டதும், எத்தனை பெரிய மனிதருடன் பேசிக் கொண்டிருக்கின்றோம் என்ற ஆச்சரியம் விளைந்தது. இதோ கால் மேல் கால் போட்டு அமர்ந்திருக்கும் அந்தப் பெரியவர். பின்னால் ஜெயப்பிரகாஷும்!

மலையின் கீழிருந்து காண்கையில் மிகப்பெரிய இடுக்குடன் காட்சியளிப்பது தான் தவசிப்பாறைக் குகை என்றே நான் இதுவரை நினைத்திருந்தேன். ஆனால் உண்மையில் அதன் நுழைவு வாயிலோ 4 அடி அகலம் கூட இருக்காது. ஆனால், கீழிருந்து காணும் போது தெரியும் குகைப்பகுதி இதோ! இதற்குள்ளும் சென்று அமர்ந்தும் தங்கியும் இருக்கலாம் என்று அறிய வரும் போது மிக்க மகிழ்ச்சியுற்றோம். அங்கு சென்றும் உவந்தோம்.

இதோ கீழிருந்து காணும் போது சிறியதாய்க் காணப்பெறும் தவசிப்பாறை இடுக்கு!

இனி அந்தப்பெரியவரின் அருஞ்செயலைக் காண்போம். இப்போது நினைத்தால் கூடப் புல்லரிக்கின்றது. நான் சென்று வந்த குகையினூடே சென்று வந்த மூதாட்டி ஒருவர், வெளியே வருகையில் கண்களில்

பிரமையுடன், தான் உள்ளே சிவலிங்க தரிசனம் கண்டதாகவும், ஜோதிமயமாய்க் காட்சியளித்ததாகவும் பெருங்குரலெடுத்து அரற்றிக் கொண்டே வெளியேறினார். வெளியேறியவர் தவசிப்பாறையின் நுனியை வெகு வேகமாய்ச் சென்றடைந்தார். நாங்கள் யாருமே இதை எதிர்பார்க்கவில்லை. இன்னும் ஒரு விநாடி தான். தாமதித்திருந்தால் சதுரகிரியாரைச் சென்றடைந்திருப்பார். கணப்பொழுதில் தன் கரங்களை நீட்டி அந்தப் பெரியவர் அந்த மூதாட்டியைத் தன் பக்கமாய் இழுத்து ஒரு பார்வையால் அவரை அடக்கினார் பாருங்கள்.

உண்மையிலேயே அவரது பெருமை சொல்லற்கரியது தான். இறைவன் அவர் உருவில் வந்து காத்தான் என்றே சொல்ல வேண்டும். அப்போது அவர் சொன்ன வார்த்தை இது! "என்ன? சிவன் வந்து உன்னைக் காப்பாத்துவான்னு பாத்தியா? நீயா விழுந்தா எவனும் காப்பாத்த மாட்டான்!" என்றது தான். இதன் அர்த்தம் தான் எத்தனை! சிந்திக்குந்தோறும் ஒவ்வொரு அர்த்தம் தருகின்றது! அதற்கு அந்த மூதாட்டியும் ஆவேசம் அடங்காமல், "எல்லாம் எனக்கும் தெரியும்" என்றதும் சிந்திக்க வைத்தது.

பின்னர் அனைவரும் சேர்ந்து மூதாட்டியை ஆசுவாசப்படுத்தி அமரவைத்தோம்.

தவசிப்பாறையின் பின்புறம் வழியாக அதன் மேலே ஏற முடியும். அவ்வாறு ஏறும் போது எனக்கு கால்நரம்பு சுண்டி சிறிது நேரம் பயணம் தடைபட்டது. மெதுவாக தவசிப்பாறையின் உச்சியைச் சென்றடைந்தோம். இதன் மேலிருக்கும் ஏதோ ஒரு இடுக்கு வழியாகத் தான் கீழே காற்றும் வெளிச்சமும் செல்கின்றது என்றும், நாம் இருப்பது தியான மண்டபத்தின் உச்சியில் என்றும் தெரிய வரும் போது நம்மையறியாமலேயே பக்தியுணர்ச்சி ஆட்கொள்கின்றது.

பாறையின் மேல் ஆசனமிட்டு அமர்ந்திருக்கும் எங்களின் வழிகாட்டி ஜெயப்பிரகாஷ்.

எங்களின் பாதிப்பயணம் சரியாக முடிவடைந்திருந்தது. அடுத்ததாக பெரிய மஹாலிங்கம் காணும் ஆவலில் தவசிப்பாறையின் இடது புறம் வழியாக மலையில் இறங்க ஆரம்பிக்க வேண்டும். ஆனால் மீண்டும் மலையேற ஆரம்பித்தார் ஜெயப்பிரகாஷ். என்ன இது? மீண்டும் மலையேற்றமா என்று கால் நடுங்கியது!

பதறிக் கோண்டே அவரிடம் கேட்டோம். பயப்படவேண்டாம். இன்னும் சிறிது தூரத்தில் சமவெளி வந்து விடும். அதன் வழியாக அடுத்த மலைக்குச் சென்ற பின்னரே பெரிய மஹாலிங்கத்தைக் காண இயலும் என்றார்.

என்ன? மலையின் மேல் சமவெளியா? என்று ஆச்சரியத்துடன் கேட்டோம். ஆம், சிறிது நேரத்தில் நீங்களே அறிந்து கொள்வீர்கள் என்று நடக்க ஆரம்பித்தார் அவர். சரியென்று அமைதியாய்த் தொடர்ந்தோம்.

இதோ மலையுச்சிக்கு ஏற ஆரம்பிக்கின்றோம்.

பாறைகளின் மேல் கற்களை வைத்துச் சிலர் வழிபட்ட தடம் தெரிந்தது. யாரென்றே தெரியாத பலர் இவ்வாறு செய்வார்களாம். ஜெயப்பிரகாஷ் சொல்கையில் ஆச்சரியங்களின் பிறப்பிடமாய் இந்த மலையும் தவசிப்பாறையும் இருப்பதை உணர்ந்தோம்.

சிறிது தூரம் தான் ஏறியிருப்போம். கண்கள் முன் கண்ட காட்சி பிரமிக்க வைத்தது. ஆம். ஒரு பெரிய சமவெளி. அத்துவான மலையுச்சியில் இருக்கின்றது. அதில் திடீரென்று பலர் நடந்து கொண்டிருப்பதைக் கண்ணுறுகின்றீர்கள். எப்படி இருக்கும்? அவர்கள் அனைவரும் பெரியமஹாலிங்கத்தைத் தரிசித்து விட்டு, தவசிப்பாறையைக் காணச் செல்கின்றார்கள் என்பதை அறிந்த போது மகிழ்ச்சி அடைந்தோம்.

அவர்களில் வெளிநாட்டுக்காரர் ஒருவரும் இருந்தது ஆச்சரியம் உண்டாக்கியது! இத்தோடு எங்களின் ஆச்சரியம் முடிவுற்று விடவில்லை. அந்தச் சமவெளியில் ஒரே ஒரு குடும்பம் வசித்துக் கொண்டிருந்தது! ஒரே ஒரு குடிசை. அதன் முன்புறம் இன்னும் சூடு குறையாத சாம்பல். அதற்கும் முன்னே ஒரு பசுக்கிடை. அதாவது பசுக்கள் படுத்திருக்கும் பகுதி. சின்னஞ்சிறு கன்றுகளைச் சுற்றிலும் முள்வேலியிட்டு அடைத்து வைத்திருந்தார்கள். புலிகளிடமும், கரடிகளிடமும் இருந்து பாதுகாக்க இந்த முன்னேற்பாடாம்!

மின்சாரமின்றி, தொலைக்காட்சியின்றி வேறு எந்த வசதிகளும் இன்றி, இயற்கை வாழ்வு வாழும் அந்தக் குடும்பத்தை நினைத்தால் ஆச்சரியமாக இருக்கின்றது! அவர்களிடம் பேசியதை வைத்து இரண்டு பக்க கட்டுரையே எழுதலாம்.

அங்கு தாகத்துக்கு நீரருந்தி, விடைபெற்று மலையிலிருந்து இறங்க ஆரம்பித்தோம்.

மலையுச்சியில் இருந்த சமவெளியில் நடந்தவாறே, அடுத்த மலையைச் சென்றடைந்து இறங்க ஆரம்பித்தோம். தவசிப்பாறை மலையைக் காட்டிலும் இந்த மலையில் புதுமையான செடிகொடிகள், மரங்களைக் கண்டோம். அடர்ந்த கானகம் என்றால் எப்படி இருக்கும் என்பதை உணர்ந்து கொண்டோம்!

நிழலடர்ந்த ஓரிடத்தில் ஓய்வெடுக்கும் எங்களின் வழிகாட்டி. இதன் அருகிலிருந்து ஊஞ்சல் கருப்பசாமி கோவில் இருப்பதாகவும் இரண்டு மலைகள் ஏறி இறங்கினால் அங்கே செல்லலாம் என்றும் அவர் சொல்ல, அந்த சமயத்தில் நமது இயலாமையை ஒப்புக் கோண்டு அடுத்த முறை முடிந்தால் அங்கேயும் செல்ல வேண்டும் என்ற ஆசையுடன் கிளம்பினோம். வேர்கள் முறுக்கிக் கொண்டு, வெயிலுக்குப் போட்டி போட்டு, கதிரவனைத் தோற்கடித்து, நிழற்பந்தல் அமைத்திருந்தது இயற்கை. இந்த மலையில் தான் பல மூலிகைகள் கிடைக்கின்றன என்ற தகவலும் சொன்னார் ஜெயப்பிரகாஷ்.

இங்கும் தரிசிக்க வேண்டிய இடங்கள் நிறைய இருக்கின்றன. உதாரணமாக

தியானக் குகை, நாகர் கோவில், வெள்ளைப் பிள்ளையார் கோவில், பெரிய மஹாலிங்கம் என்று அடுக்கிக் கொண்டே செல்லலாம். சித்தர்களின் சாம்ராஜ்யமல்லவா? அப்படித் தான் இருக்கும்.

நான் ஏற்கனவே சொன்னது போல் எங்கெல்லாம் நமக்குத் தாகம் ஏற்படுகின்றதோ, அங்கெல்லாம் நீர் கிடைக்க இறைவன் ஏற்பாடு செய்துள்ளான் என்று. இங்கும் தண்ணீர் கிடைக்குமா என்று பார்க்கும் போதே, உன்னுள்ளேயே இருக்கின்றதே? வெளியே எங்கு தேடுகின்றாய்? என்பது போல், மலை நெல்லிக்கனி கிடைத்தது! கடித்ததும் துவர்ப்பு, விழுங்கும் போது இனிப்பு என்று தாகமும் தவிர்த்ததுடன் கீழே இறங்கி வரும் வரை பசியையும் தீர்த்த அருமை சொல்லித் தெரியாது.

திடீரென்று அருகில் பலர் பேசும் குரல்கள் கேட்க ஆரம்பித்தது. பெரிய லிங்கத்தை நெருங்கிவிட்டோம் என்றார் வழிகாட்டி. அங்கேயே பக்திமணம் கமழ ஆரம்பித்தது. இதோ, மிகப் பிரமாண்டமாய், அவ்விடத்தில் வேறெங்குமே பாறைகள் இல்லாத போதும், சுயம்பாய், பாறை வடிவில் பெரிய மஹாலிங்கம் காட்சியளிக்கின்றார்.

மேலே மரம் வளர்ந்திருப்பது போல் தோன்றுகின்றது தானே? உண்மையில் அது லிங்கத்தின் மேற்புறமிருந்து வளரவில்லை. ஆவுடையாரின் கீழிருந்து வளர்ந்து (ஐந்து தலை நாகம் போல்) காலை ஊன்றி வளைந்து லிங்கத்தோடு ஒன்றியிருக்கின்றது. பஞ்ச பூதங்களும் சிவனில் அடக்கம் என்னும் தத்துவம் உணர்த்தவோ அல்லது ஐம்புலன்களாலும் மஹாலிங்கரைச் சிக்கெனப் பிடித்துக் கொள் என்று உணர்த்தவோ அறிகிலேன்.

குயில்கள், மலை வண்டுகள் மற்றும் பிராணிகளின் ஓசையைத் தவிர மொத்த கானகமும் ஒரு அமைதியைக் கொண்டிருக்கின்றது.

சற்று தூரத்திலிருந்து பெரிய மஹாலிங்கத்தின் தோற்றம். இதென்ன? பாறை தானே என்று நினைத்தால் பாறை தான். ஆனால், அந்த இடத்தில் ஏதோ அருள் மையம் கொண்டிருப்பதை அங்கு சென்று சிறிது நேரம் அமர்ந்து பார்த்தால் நாமே உணர்ந்து கொள்ளக் கூடும்.

சிறிது நேரம் அமர்ந்திருந்து விட்டு, மீண்டும் தரையிறங்க ஆரம்பித்தோம். வழியில் பல அதிசயங்களும் கண்டோம். உதாரணத்திற்கு ஒரே செடியில் இரு நிற இலைகள்!

இறங்கும் போது கொஞ்சம் ஜெயப்பிரகாஷுடன் பேச்சுக் கொடுக்க

ஆரம்பித்தேன். விலங்குகள் பற்றி ஆரம்பித்தது எங்கள் உரையாடல். கரடி, யானை, காட்டுப் பன்றிகள் இவை தான் இங்கே மலையெங்கும் பரவியிருக்கும் வன விலங்குகள். பத்துப் பதினைந்து புலிகளும் இருக்கும் என்றார். ஆனால், மேலே சொன்ன மூன்றும் அதிக எண்ணிக்கையில் இருப்பவை. இவற்றால் நமக்கு அதிக தொந்தரவு இருக்காது என்றவர், திடீரென பாதையில் ஓரிடத்தினில் தோண்டப்பட்டிருந்த ஒரு குழியைக் காட்டி, இதோ கரடி இப்போது தான் தோண்டிப் பார்த்து விட்டுச் சென்றிருக்கின்றது என்றார். எனக்குள் கிலியானது!

தேள், பாம்பு போன்ற விஷ ஜந்துக்களும் அதிகம் உண்டாம். ஆனால், அவைகளாலும் சுந்தர மஹாலிங்கத்தின் அருளால் எந்தப் பிரச்னையும் வருவதில்லை என்றார்.

பின்னர் எங்கள் பேச்சு மீண்டும் மூலிகை பக்கமாய்த் திரும்பியது. அப்போது அவர் சொன்ன ஒரு விஷயம் ஆச்சரியப்பட வைத்ததுடன், மீண்டும் ஒரு முறை வந்து பார்த்தே ஆக வேண்டும் என்ற ஆவலைத் தூண்டியது. ஆம், ஒளிவிடு மரம் என்று ஒரு மரம் இருக்கின்றதாம். அது இந்த மலையில் பிரசித்தமாம். இரவில் எல்லா விளக்குகளையும் அணைத்து விட்டுப் பார்த்தால், அதிலிருந்து ஒளி வருமாம். இரவில் தங்கியிருந்து தன்னுடன் வந்தால் அழைத்துச் செல்வதாய் அவர் கூற, என்னால் நம்பவும் முடியவில்லை, நம்பாமலும் இருக்க முடியவில்லை. இருந்தாலும், அடுத்த முறை நேரில் கண்ணுற வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன்.

சதுரகிரியின் அடர்ந்த காடுகள் மூலிகைச் சுரங்கம் தான்.